KANTON AARGAU

hallo — aargau.ch

# பணமும் வரியும்

வங்கிக் கணக்கு / பணப்பரிமாற்றம்
வரிகள்
கடன்
குறைந்த பணத்துடன் சீவித்தல்

# வங்கிக் கணக்கு / பணப்பரிமாற்றம்

பணம் சம்பாதித்து கட்டணம் செலுத்துபவருக்கு வங்கியில் அல்லது தபால்; கணக்கு தேவை. பொருட்கள் வாங்குவதற்கு வங்கி -கடன் அட்டை பரவலாகப் பாவிக்கப்படும்.

## வங்கிக்கணக்கு

சுவிஸில் அநேகமாக ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் ஒரு வங்கிக்கணக்கு இருக்கும். வேலை செய்பவர்களின் சம்பளம் வழமையாக வங்கிக்கணக்குக்குத்தான் அனுப்பப்படும். அதிகளவு வங்கிகளும் தபாலகங்களும் தனிப்பட்ட கணக்குகளை வழங்குகின்றன. வங்கிக்கணக்கு தொடங்குவது இலவசமானது. ஆயினும் பின்பு பலவித கட்டணங்கள் செலுத்தவேண்டும். கட்டணங்கள் வட்டிவீதம் சேவைகள் இடத்துக்கிடம் வித்தியாசமாக இருப்பதால் அவற்றை ஒப்பிடுவது நல்லது. வங்கிக்கணக்குத் தொடங்குவதற்குக் கடவுச்சீட்டு அல்லது வேறு அடையாள அட்டை தேவை.

## வங்கி அட்டை / கடன் அட்டை

கணக்கு வைத்திருப்பவர் பணம் எடுப்பதற்காக வழமையாக ஒரு கணக்கு அட்டை கொடுக்கப்படும். இது கணக்குள்ள வங்கிக்கு மட்டுமே செல்லுபடியாகும். வங்கிகள் தபாலகங்கள் எல்லா தானியங்கியிலும் பணம் எடுக்கக்கூடியதாகவும் அதிகமான கடைகளில் பணம் செலுத்தக்கூடியதாகவும் டெபிட் காட்டுகளை (உ+மாக Maestro) அறிமுகப்படுத்தியுள்ளன. இந்த அட்டைகளை வெளிநாட்டிலும் பாவிக்கலாம். ஒவ்வொரு அட்டைக்கும் வித்தியாசமான கட்டணம் அறவிடப்படும். கடனட்டைகளைப் பல இடங்களில் விண்ணப்பிக்கலாம். அதன் சேவைகளும் கட்டணங்களும் வித்தியாசமாக இருக்கும், இவற்றை ஒப்பிடுவது பயனுள்ளது. வங்கி அட்டை - கடன் அட்டை மூலம் பணம் செலுத்துவது தற்போது நன்கு பரவியுள்ளது.

KANTON AARGAU

hallo — aargau.ch

## கணக்குகள் செலுத்துதல்

"கணக்குகள் பணம் செலுத்தும் படிவம் மூலம் தபாலகத்தில் அனுப்பப்படும். இதற்கு மூன்று வழிமுறைகள் உள்ளன.

- மின் வங்கி: இணையமூலம் பணம் செலுத்துவது மிகவும் பரவலானதும் பாதுகாப்பானதும்.
- கருமபீடத்தில்;. பணம் செலுத்தும் படிவம் மூலம் தபாலகத்தில் பணமாகச் செலுத்துதல். தபால் கணக்கு உள்ளவர்கள் நேரடியாகக் கணக்கிலிருந்து கழிக்கலாம். வங்கிக் கணக்கு வாடிக்கையாளர்கள் வங்கிக் கரும பீடத்தில் பணம் செலுத்த வேண்டிய அறிவுறுத்தல் கொடுக்கலாம். .
- தபால் மூலம்: பணம் செலுத்த வேண்டிய அறிவுறுத்தல்களை தபால் மூலம் வங்கிக்கோ அல்லது தபாலகத்திற்கோ அனுப்பலாம். மேலதிக விளக்கமான தகவல்களை வங்கி அல்லது தபாலகத்தில் தருவார்கள்.
- தொடர்ந்து ஒழுங்காக வரும் கணக்குகளுக்கு பணம் செலுத்தும் முறைகள்: (LSV) இது வசதியானது செலுத்தவேண்டிய பணம் தானாகவே கணக்கிலிருந்து கழிக்கப்படும். பணம் செலுத்தவேண்டியவர் அதற்குரிய தகவல்களை நேரடியாகவே வங்கி/தபாலகத்திற்கு அனுப்புவார்.
- எப்போதும் ஒரேயளவு தொகை (உமாக வாடகை) செலுத்த வேண்டுமானால் வங்கி அல்லது தபாலகத்திற்கு ஒரு நிரந்தரக்கட்டளை (Dauerauftrag) மூலம் பணத்தை மாற்ற ஒழுங்கு செய்யலாம்.

செலுத்த வேண்டிய கணக்குகளில் காலக்கெடு குறிக்கப்பட்டிருக்கும். இக் காலக் கெடுவை கடைப்பிடிக்காவிடின் தொடர்ந்து வசூலிப்பு இலாகாமூலம் வசூலிப்பதற்கான நடைமுறை ஏற்படுத்தப்படலாம். "

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.salut-aargau.ch/ta/money-and-taxes/accounts--transactions

# வரிகள்

சுவிஸில் உள்ள வரிச்சுமை வதிவிடங்களில் தங்கியுள்ளது. ஒரு தனிப்பட்ட நபரின் வரிகள் வருமானம் சொத்து விற்பனைவரிகள் ஆகும்.

## வரி வகைகள்

சுவிஸில் அரசு, மாநிலம், கிராமசபை மற்றும் உள்நாட்டுத் தேவாலயங்கள் அனைத்துக்கும் வரிகள் உள்ளன. நேரடி வரி, மறைமுக வரி என வேறுபடுத்தலாம். நேரடி வரியுள்; வருமானம் - சொத்துவரி அடங்கும். இதை நேரடியாக வரி செலுத்துபவர் செலுத்தவேண்டும். மறைமுக வரிகளாவன விற்பனைவரி, சிகரெட்வரி, கனிமஎண்ணெய் வரிகளாகும். இந்த வரிகள் பொருட்களின் விலைக்குள் அடங்கியிருக்கும்.அதிகமான வரிகளுக்கு மாநிலம் கிராமசபைகளே பொறுப்பான போதும் நேரடி வரிகளின் அளவு ஒவ்வொரு வதிவிடங்களுக்கும் வித்தியாசப்படும்.கணவன் மனைவி இருவருக்கும் ஒன்றாகவே வரி அறவிடப்படும்.

## ஆதாரவரி

புதிதாகக் குடியேறிய வெளிநாட்டவர்களின் வருமானவரி நேரடியாக அவர்களின் சம்பளத்திலிருந்தே கழிக்கப்படும் (ஆதாரவரி, Quellensteuer). வேலை வழங்குபவரே தம்முடன் வேலை செய்பவர்களைப் பதிந்து கொள்வார்.

- வரியின் அளவு வருமானம் குடும்பநிலை (தனியானவர் மணமானவர் மணவிலக்குப் பெற்றவர்) மற்றும் பிள்ளைகளின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும். ஏதாவது மாற்றங்கள் நேர்ந்தால் உடனடியாக அறிவிக்கவேண்டும்.
- ஆதாரவரியுடன் மேலும் பல கழிப்பனவுகள் இடம்பெறலாம். உ+மாக 3 வது ஏற்பாடுகள், கடனுக்குரிய வட்டி, அதிக நோய் சம்பந்தப்பட்டசெலவுகள் என்பன.
- சொத்து இருந்தால் அந்தத் தகவலைத் தெரியப்படுத்தி அதற்கான வரியைத் தனியாகக் கட்ட வேண்டும்.
- வருடத்திற்கு 120'000 பிராங்குகள் வருமானமிருப்பின் ஆண்டு வருமானத்தகவலைச் சமர்ப்பிக்க வேண்டும் (ஒழுங்கான வரிவிதித்தல்).
- மணம்முடித்த கணவனோ மனைவியோ சுவிஸ் கடவுச்சீட்டு உள்ளவராகவோ அல்லது நிரந்தர வதிவிட உரிமை C உள்ளவராகவோ இருந்தால் ஒரு வருமானத்தகவல் பத்திரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். (ஒழுங்கான வரிவிதித்தல்)

மாநில வரி இலாகா (Kantonales Steueramt) ஆதார வரி பற்றிய மேலதிகத் தகவல்களை அறியத்தரும். வரிகள் சொத்துகள் பற்றிய சந்தேகங்களிருப்பின் வதிவிடக் கிராமசபைகளிலுள்ள நிதி நிர்வாகத்திடம் (Finanverwaltung) கேட்டு உதவி பெறலாம்..

## நடைமுறை வரி விதித்தல்

சுவிஸ் கடவுச்சீட்டு அல்லது நிரந்தர வதிவிட உரிமை C உள்ளவர்கள் நடைமுறையான வரி கட்ட வேண்டும் (ordentliche Besteuerung). அவர்களின் சம்பளத்தில் வரி கழிக்கப்பட மாட்டாது. அவர்கள் தமது வரித்தகவல்களை (Steuererklärung) நிரப்பியனுப்பிப் பின்பு கட்டணமாகச் செலுத்தலாம். வரித்தகவல்களை நிரப்புவது சுவிஸ் மக்களுக்கும் சிக்கலான விடயம். முதல் தடவையாக வரித்தகவல்களை நிரப்புவதானால் யாரிடமாவது உதவி கோருவது புத்திசாலித்தனம். நடைமுறையான வரிவிதித்தலுக்கு கிராமசபை வரி இலாகாவே (Gemeindesteueramt) பொறுப்பாகும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.salut-aargau.ch/ta/money-and-taxes/taxes

# கடன்

சரியான நேரத்திற்குக் கட்டணங்களைச் செலுத்தாவிடின் உண்மையான பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும். நிதிப் பிரச்சனைகள் எற்படுமிடத்து கடன் ஆலோசனை நிலையங்களின் உதவியைப் பெறலாம்.

## எச்சரிக்கைக் கடிதமும்

சரியான நேரத்திற்குக் கட்டணங்களைச் செலுத்தாவிடின் சாதாரணமாக முதலாவது இரண்டாவது எச்சரிக்கைக் கடிதங்கள் வரும் (Mahnung). அதன் பின்பு எந்த நேரத்திலும் கட்டணம் அனுப்பியவர் வசூலிப்பு நடைமுறையை (Betreibung) தொடரலாம். இதன்போது கட்டணம் கட்ட வேண்டியவருக்கு வசூலிப்பு நடைமுறை அலுவலகத்திலிருந்து (Betreibungsamt) கட்டணத்தைக் கட்டச் சொல்லி கடிதம் வரும். அதன் போது மேலதிக சேவைக் கட்டணமும் சேர்ந்து வரும். இந்நடைமுறை சட்டப்படி தவறென கருதுமிடத்து அவர் அதற்கு எதிரான ஒரு சட்டநடவடிக்கையை (Rechtsvorschlag) குறிப்பிட்ட வசூலிப்பு நடைமுறை அலுவலகத்தில் தொடரலாம். கவனம்: வசூலிப்பு நடவடிக்கையானது சம்பளப்பிடிப்பு அல்லது பெறுமதியான பொருட்களை எடுத்துச்செல்லல் போன்ற நடவடிக்கையாக இருக்கலாம். அத்துடன் வசூலிப்புநடைமுறையானது, வசூலிப்பு பதிவேடுகளில் (Betreibungsregister) பதியப்படும்(பணம் செலுத்தப்பட்டிருந்தாலும்). இது மற்றவற்றுடன் வீடுதேடுதலின் போது பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

## கடன்

கடன் அல்லது நிதி நெருக்கடி இருந்தால் கடன் ஆலோசனை நிலையத்தை (Schuldenbetratungsstelle) நாடலாம். அங்கே உதவி கிடைக்கும். அங்குள்ள நிபுணர்கள் உங்களுடன் சேர்ந்து உங்கள் நிலையைத் தீர்க்க வழி தேடுவார்கள். Caritas நிறுவனம் அநாமதேய தொலைபேசி ஆலோசனையை "SOS-Schulden"- Beratungs-Hotline, தருகிறது. தொலைபேசி 0800 708 708 (இலவசம்) தேவைப்பட்டால் தொடர்ந்து வேறு ஒரு நிலையத்தைப் பரிந்துரை செய்யலாம். இணைய மூலமும் தேவையான தகவல்களைப் பெறப் பல மொழிகளிலுமுள்ள Schuldenberatung Aargau-Solothurn இணையதளத்தின் கடன் ஆலோசனைநிலையத்தைப் பாருங்கள்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.salut-aargau.ch/ta/money-and-taxes/debt

# குறைந்த பணத்துடன் சீவித்தல்

சுவிஸில் வாழ்க்கைச் செலவு கூட. அதனால் சில பொருட்களை பாவித்த பொருட்களாக வாங்கிப் பாவிப்பது பிரயோசனப்படும். பணத் தட்டுப்பாடு உள்ளவர்கள் சில விசேட கடைகளில் மலிவாக வாங்கலாம்.

## பாவித்த பொருட்கள்

சுவிஸில் பல பாவித்த பொருட்களின் கடைகள் (Brockenhäuser) உள்ளன. அங்கு பாவித்த பொருட்களை மிகவும் மலிவு விலையில் வாங்கலாம். விசேட சந்தைகளிலும் சில தனிப்பட்ட நபர்கள் பாவித்த பொருட்களை விற்பார்கள் உ+மாக பழைய பொருட்கள் கடை, உடுப்புக்கடை, பனிச்சறுக்கு பொருட்கள் கடை போன்றன.. அதை விட இணைய மூலமும் பாவித்த பொருட்கள் விற்றல் வாங்குதலும் மிகவும் விருப்பத்தக்கதாக உள்ளன.

## விளையாட்டு ஃ கலாச்சாரம்ஃகல்வி

Kulturlegi உடன் - வருமானம் குறைந்தவர்களுக்கு கிடைக்கும் இந்த அடையாள அட்டையுடன் விளையாட்டு - கலாச்சார - கல்வி நிகழ்ச்சிகளில் குறைந்த செலவில் பங்குபற்றலாம். இந்த அடையாள அட்டைக்கு கரித்தாஸில் விண்ணப்பிக்கலாம். கரித்தாஸ் விண்ணப்பத்தைப் பரிசோதித்த பின்பு முரடவரசடநபi பெறத் தகுதியுள்ளவரா என்பதை அறிவிக்கும்.

## கரித்தாஸ் சந்தை

பணக்கஸ்டமுள்ளவர்கள் கரித்தாஸ் கடையில் (Caritas Markt) உணவு மற்றும் தினசரிப்பாவனைப் பொருட்களையும் மலிவான விலைக்கு வாங்கலாம். இதற்குத் தேவையான பிரத்தியேக அட்டையை கரித்தாஸிலேயே விண்ணப்பித்தால் அதைப் பரிசோதித்த பின்பு இந்த அட்டையைப் பெறத் தகுதியுள்ளவரா என அறிவிப்பார்கள் . இந்தப் பிராந்தியத்தில் Baden, Brugg இலும் இக் கடைகள் உள்ளன. மேலும் அறோ கரித்தாஸ் கடையில்; இந்தப் பிரத்தியேக அட்டையில்லாமல் பாவித்த உடுப்புகள் வாங்கலாம்.

## அரசாங்க உதவிகள்

குறைந்த வருமானத்துடன் சீவிப்பவர்கள் பல அரசாங்க உதவிகளைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்கள். உதாரணத்திற்கு மருத்துவக் காப்புறுதிக் குறைப்பு , பெற்றோர் தரும் உதவித்தொகை அல்லது ஒரு மேற்பயிற்சிக்காக விண்ணப்பித்துப் பெறும் கல்வி உதவி நிதி என்பனவாகும். ஒரு குறிப்பிட்ட வாழ்க்கைத் தரத்தில் உள்ளவர்களுக்கு சமூகக்காப்புறுதிகள் அல்லது சமூக உதவித்தொகையும் கிடைக்கும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.salut-aargau.ch/ta/money-and-taxes/living-with-little-money